செய்தி வெளியீடு எண்.118 நாள் 24.02.2017

**திருவள்ளூர் மாவட்டம், சமூக நலத்துறை சார்பாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 530 பயனாளிகளுக்கு ரூ.ஒரு கோடியே 82 லட்சத்திற்கான திருமண உதவித்தொகையும், 2120 கிராம் (265 சவரன்) தங்கத்தினை பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.பலராமன் அவர்கள் மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.ஏ.ஏழுமலை ஆகியோர் வழங்கினார்கள்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், சமூக நலத்துறை சார்பாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 530 பயனாளிகளுக்கு ரூ.ஒரு கோடியே 82 லட்சத்திற்கான திருமண உதவித்தொகையும், 2120 கிராம் (265 சவரன்) தங்கத்தினை பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.பலராமன் அவர்கள் மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.ஏ.ஏழுமலை ஆகியோர் இன்று (24.02.2017) வழங்கினார்கள்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திருவள்ளூர், பூண்டி, கடம்பத்தூர், திருவாலங்காடு, புழல் மற்றும் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த 530 பயனாளிகளுக்கு ரூ. ஒரு கோடியே 82 லட்சத்திற்க்கான திருமண உதவித்தொகையும், 2120 கிராம் (265 சவரன்) தங்கத்தையும் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் வழங்கினார்கள்.

திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தில் 77 பயனாளிகளுக்கும், பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் 39 பயனாளிகளுக்கும், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 109 பயனாளிகளுக்கும், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தில் 48 பயனாளிகளுக்கும், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் 186 பயனாளிகளுக்கும், புழல் ஊராட்சி ஒன்றியத்தில் 71 பயனாளிகளுக்கும் என மொத்தம் 530 பயனாளிகளுக்கு திருமண உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் தங்கம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர்(பொ) திருமதி.எஸ்.சங்கீதா, திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.திவ்யஸ்ரீ மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~